# பெரம்பலூர் நகராட்சி

## 2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16.11. 2022 ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## தலைமை : நகர் மன்ற தலைவர்

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>16.11.2022</td><td>பொருள் 01:பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட1 முதல் 21 வரை உள்ள குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீரை மாதந்தோறும் ஆய்வு செய்து பயன்பாட்டிற்கு உகந்தது என்று சான்று பெறுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படியும் மேலும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான கிணறுகளின் நீரை ஆய்வு செய்து தரச்சான்றிதழ் பெறுமாறு கூறிய அறிவுரைக்கிணங்க மேற்கண்ட கொள்ளிடம் கூட்டு குடிநீர் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கிணறுகளின் நீரினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வாரியம் மூலம் ஆய்வு செய்திட வேண்டியுள்ளதால் மேற்படி ஆய்வு கட்டணத் தொகை ரூ.50,000 ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 9467/2012/ இ1</td><td>தீர்மான எண். 215 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>16.11.2022</td><td>பொருள் 02 : இந்நகராட்சியின் பொது நிதி 2022-2023 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 02.09.2022 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td colspan="5">பொது நிதி 2022-2023</td></tr>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 21 வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள மின் மோட்டார்களின் ஏற்படும் பழுதுகளை பழுது சீர்செய்யும் பணிக்கு</td><td rowspan="2">4.90</td><td>திருமதி. ஜெயந்தி , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.42% மதிப்பீட்டிற்கு குறைவு</td><td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி அளித்த திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>திரு. K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.40% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.42 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3.மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 4276/2022/ இ1</td><td>தீர்மான எண். 216 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>16.11.2022</td>
<td>
பொருள் 03 : இந்நகராட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 27.10.2022 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th colspan="5">சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் - 2021-2022</th></tr>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்ச ம்)</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி யின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 துறைமங்கலம் டி.எல்.சி பள்ளி அருகில் பொது விநியோக கட்டிடம் கட்டும் பணி</td><td rowspan="2">10.00</td><td>ஸ்ரீ , விநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.09% மதிப்பீட்டிற்கு குறைவு</td><td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ , விநாயகா டிரேடர்ஸ் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.41% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>
1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ , விநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.09 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 3237 /2022/ இ1
</td>
<td>தீர்மான எண். 217 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16.11.2022</td>
<td>
பொருள் 04 : நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் 02.07.2022 அன்று நகராட்சி அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மேற்படி, ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சியால் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களும் தகுதி சான்று பெற்ற விவரம் கோரப்பட்டதில் ஒரு சில வாகனங்கள் தவிர்த்து மீதமுள்ள வாகனங்களுக்கு தகுதிசான்று பெறப்படாமல் இயக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.<br>
தகுதிசான்று பெறாத வாகனங்களுக்கு தகுதி சான்று பெற்று வாகனங்கள் இயக்க வேண்டும் என்பதால் தொடர்ந்து தகுதி சான்று பெறாத வாகனங்கள் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக தகுதி சான்று பெறாமல் இருந்து வருகிறது. எனவே, தகுதிசான்று பெறாத வாகனங்களுக்கு தகுதிசான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகள் அனைத்தும் சரிசெய்து தகுதிசான்று பெற வேண்டியுள்ளதால் பொது சுகாதார பிரிவு குப்பை அள்ளு TN 46 P 1596ம் டாடா ஏசி என்ற வாகனத்தினை VST Motors Pvt limited Trichy என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.4,42,530 /– யை வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 4465 /2022/ இ1
</td>
<td>தீர்மான எண். 218 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16.11.2022</td>
<td>
பொருள் 05 : அரசாணை (நிலை) எண் 158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்சி –4) துறை நாள் 02.11.2022 தேதி வரப்பெற்ற அரசாணையில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிர்வாக அனுமதி . தொழில்நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குவது குறித்து திருத்தியமைக்கப்பட்டு வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>
ந.க.எண் 7751 /2022 /இ1
</td>
<td>தீர்மான எண். 219 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **16.11.2022** | **பொருள் 06 :** அரசாணை (நிலை) எண் 43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்( சந4–1) துறை நாள் 27.07.2022 ன்படி முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலைமச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில் விதி எண் 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி நடைபெறும் நாட்களில் காலை உணவு வழங்கும் திட்டம் அமுல்படுத்த தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மற்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>மேலும் இந்நகராட்சி பகுதியில் உள்ள 3 பள்ளிகளில் காலை உணவு திட்டம் செயல் படுத்தவும் ஒரு மாணவருக்கு ரூ.12.70 /– வீதம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன்படி ஒவ்வொரு மாதமும் ஏற்படும் ( சமையல் செய்ய தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள் எரிவாயு உருளை மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள ) செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய்.பத்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிகலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 4465 /2022/ இ1** | தீர்மான எண். 220 அனுமதிக்க ப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 07 :** மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் அரியலூர் அவர்களின் கடித எண் ARY0326/RS/DEE/TNPCB/ ARY/ROA/2022 நாள் 26.10.2022 தேதிய கடிதத்தில் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண் 221/3 மற்றும் 211/6 துறைமங்கலம் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மாதம் தோறும் கழிவு நீர் முன்மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப் டிசம்பர் 2021 முதல் செப்டம்பர் 2022 வரை செலுத்த வேண்டிய பரிசோதனை கட்டணம் ரூ.87,330/- செலுத்த கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் 7544/2022 /இ1 | தீர்மான எண். 221 அனுமதிக்க ப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 08:**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை– 28 அவர்களின் கடித எண் 31115/2021/CFC **நாள்14.10.2022 ன் படி 15 வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தில் 2021–2022 ம்நிதி ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட** UN TIED GRANT நிதியில் தெருமின்விளக்குகள் ரூ.53.03 இலட்சத்தில் கொள்முதல் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. **15 வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தில் 2021–2022 ம் நிதி ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட** UN TIED GRANT நிதியில் ரூ.52.00 இலட்சமும், பொதுநிதியில் ரூ.1.03 இலட்சமும் சேர்த்து ரூ.53.03 இலட்சத்ற்கு ஒப்பந்தபுள்ளி கோரி செலவினம் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் .<br>3. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்பிப்பதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 7554/2022 /இ1 | தீர்மான எண். 222 அனுமதிக்க ப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 09 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 ல் உள்ள சாமியப்பா குறுக்கு தெரு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் மேற்படி பகுதியில் 3'' PVC குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.0.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** | தீர்மான எண். 223 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7752 /2022/ இ1 | |
| **16.11.2022** | **பொருள் 10 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **3** ல் உள்ள பாலாஜி நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் மேற்படி பகுதியில் 3'' PVC குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.0.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7753 /2022/ இ1 | தீர்மான எண். 224 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 11 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 ல் உள்ள போஸ்ட் ஆபிஸ் தெரு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் மேற்படி பகுதியில் 3'' PVC குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7754 /2022/ இ1 | தீர்மான எண். 225 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 12 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 ல் உள்ள ஆலாம்பாடி சாலையில் உள்ள போயர் தெருவிற்கு 1000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட PVC தொட்டிகள் அமைத்து தண்ணீர் வசதி செய்ய ரூ.1.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7755 /2022/ இ1 | தீர்மான எண். 226 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 13 :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அங்காயி அம்மன் கோயில் குளம், சர்கார் கிணறு, சித்தர் கோயில் கிணறு மற்றும் துறைமங்கலம் கிணறு ஆகியவற்றிலிருந்து அதன் அருகே உள்ள பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் இணைப்பு வழங்கி தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு **ரூ.2.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7756 /2022/ இ1 | தீர்மான எண். 227 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 14 :** இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய், உப்பு தண்ணீர் குழாய் மற்றும் கேட்வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்யும் பணிக்கு ரூ. 4.85/-இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7757 /2021/ இ1 | தீர்மான எண். 228 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>16.11.2022</td>
<td>பொருள் 15 : இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 ல் உள்ள தெப்பகுளத்தில் உள்ள திறந்த வெளி கிணற்றில் இருந்து வார்டு எண் 18 ல் உள்ள மாரியம்மன்கோயில் தெருவிற்கு குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ. 1.00/-இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7758 /2021/ இ1</td>
<td>தீர்மான எண். 229 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16.11.2022</td>
<td>பொருள் 16 : பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் , தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் திறந்த வெளி கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விநியோம் செய்யப்படும் குடிநீரில் கிருமி நாசினிகள் ( Sodium Hypo Chloride ) கலக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் Chlorin sodium Pump பழுதடைந்து உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ. 1.50/-இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7759 /2021/ இ1</td>
<td>தீர்மான எண். 230 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16.11.2022</td>
<td>பொருள் 17 : பெரம்பலூர் நகராட்சி புதியபேருந்து நிலையம் அம்மா உணவகம் அருகில் INDIA 1 ஏடிஎம் வைப்பதற்கு மனுதாரர் திரு . து கதிரேசன் Adithiyaa shopping mall, perambalur ,INDIA 1ஏடிஎம் வைத்துகொள்ள அனுமதி கோரியுள்ளனர் மேற்படி இடத்தினை நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர், ஆய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் அதனை தொடர்ந்து மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளர் மேலாய்வு செய்து கீழ்காணும் விவரப்படி மாத வாடகை நிர்ணையம் செய்து வழங்கலாம் என ஆய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>இடம்</th><th>பரப்பளவு</th><th>மாத வாடகை ரூ</th><th>ஆண்டு வாடகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>புதிய பேருந்துநிலையம் அம்மா உணவகம் அருகில் 6x6 அளவுள்ள காலிஇடம்</td><td>36 ச.அடி</td><td>2150/–</td><td>25800/–</td></tr>
</table>
நகராட்சி நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர் மற்றும் நகராட்சி பொறியாளரின் ஆய்வறிக்கைகளின் படியும், நகராட்சி பொறியாளர் அறிக்கையின் படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதவாடகை அடிப்படையிலும் பெரம்பலூர் நகராட்சியின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிக்கையில் காணும் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும் அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் அவ்வப்போதைய ஆணை மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டும் திரு . து கதிரேசன் Adithiyaa shopping mall, perambalur அவர்களிடம் சம்மத கடிதம் பெற்று, மேற்கண்ட பெயரில் மேற்குறிப்பிட்ட இடத்தில் INDIA 1 ஏடிஎம் அமைத்துகொள்ள அனுமதி வழங்கலாம்.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 5410/2022/அ2</td>
<td>தீர்மான எண். 231 ஒத்திவைக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16.11.2022</td>
<td>பொருள் 18:பெரம்பலூர் நகராட்சியில் தினசரி உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் அல்ட்ரா டெக் நிறுவனத்திற்கு ஜே சி பி இயந்திரம் மூலம் 6 யூனிட் டிப்பர்லாரி மூலம் ஏற்றி ஆலைக்கு கொண்டு சேர்த்த வகையில் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.75 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td>தீர்மான எண். 232 அனுமதிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட ஆலத்தூர் அக்ரோ சர்வீஸ் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7760 /2022 / இ1 | |
| 16.11.2022 | **பொருள் 19 :** பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 12 கம்பன் நகர் பாலம் முதல் வார்டு எண் 18, 19 சாமி பிறந்த இடம் வரை உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால்களில் உள்ள செடி கொடிகள் மற்றும் முட்புதர்கள்நிறைந்து உள்ளதால் மழைகாலங்களில் நீர்செல்லுவதற்கு ஏதுவாக ஜே சி பி மற்றும் டிப்பர் வாகனம் பயன்படுத்தி சுத்தம் செய்த குப்பைகளை அப்புறபடுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.20 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7761 /2022/இ1 | தீர்மான எண். 233 அனுமதிக்கப்பட்டது |
| 16.11.2022 | **பொருள் 20 :** பெரம்பலூர் நகராட்சி பழைய பேருந்து நிலையம் காந்தி சிலை முதல் பெரியார் சிலை வரை உள்ள தார்சாலை மற்றும் புதிய பேருந்து நிலைய தார்சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்லவும் மற்றும் போக்குவரத்து வாகனங்களுக்குசிரமமாக உள்ளது நகராட்சி தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படியும் பொதுமக்களின் நலன் கருதி பணியின் அவசர அவசியம் கருதிமேற்படி சாலையினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.95 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7762 /2022/இ1 | தீர்மான எண். 234 அனுமதிக்கப்பட்டது |
| 16.11.2022 | **பொருள் 21 :** பெரம்பலூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரை உள்ள தெருக்களின் ஒரங்களில் உள்ள மண்மேடுகள் மற்றும் செடி கொடிகளை ஜே சி பி வாகனம் மூலம் அகற்றி சுத்தம் செய்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7763 /2022/இ1 | தீர்மான எண். 235 அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் 22 :** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனங்களுக்கு தகுதி சான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய பொது சுகாதாரப்பிரிவு வாகனங்கள் பணிமனைக்கு சென்றுள்ளதால் தினிசரி சேகரமாகும் குப்பைகளை அகற்றும் பணிக்கு 1 யூனிட் டிராக்டர் 2 எண்ணிக்கையில் பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.40 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட ஆலத்தூர் அக்ரோ சர்வீஸ் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7764 /2022/இ1 | தீர்மான எண். 236 அனுமதிக்கப்பட்டது |

**16.11.2022**

**பொருள் 23 :** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தனிநபர் கழிவறைகள் கட்டுவதற்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.6193 / SBM / 2022 நாள். 18.07.2022ன் படி 2021 -2022ம் ஆண்டிற்கு 63 எண்ணிக்கையும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18856/2022/தூ.இ.தி / 2022 நாள். 13.07.2022ன் படி 2022-2023 ம் ஆண்டிற்கு 70 எண்ணிக்கை ஆக கூடுதல் 133 தனிநபர் கழிவறைகள் கட்டுவதற்கு பயனாளிகளை தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் கழிவறை கட்டுவதற்கு மதிப்பீட்டு தொகையாக ரூ.30000/- என நிர்ணயிக்கப்பட்டு மத்திய , மாநில மற்றும் நகராட்சி பங்கு தொகை அரசு மானியம் ரூ.**9328**/ஐ வழங்கவும், மீதமுள்ள தொகை ரூ.**20672**/.ஐ தனிநபர் கழிவறை கட்டுமானத்திற்கான பயனாளிகளின் பங்கு தொகையாக பங்களிக்க வங்கிகள் / நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி பங்களிப்பை (CSR) திரட்ட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்கண்டுள்ளவாறு மத்திய, மாநில அரசு பங்குத்தொகை, மற்றும் நகராட்சி பங்குதொகையாக பயனாளிகளுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **வ. எ ண்** | **நிதியாண்டு** | **தனிநபர் கழிவறை கள் கட்டவே ண்டியஎ ண்ணிக்கை க** | **மத்திய அரசு பங்குதொ கை (GOI Share)** | **மாநில அரசு பங்கு தொகை (State Share)** | **நகராட்சி பங்கு தொகை (ULB Share)** | **தனிநபர் கழிவறைக் கு வழங்கப்ப டும் அரசு மானிய மொத்த தொகை (One Unit)** |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2021-2022 | 63 | 4000 | 2666 | 2666 | 9328 |
| 2 | 2022-2023 | 70 | 4000 | 2666 | 2666 | 9328 |
| | கூடுதல் | 133 | | | | |

மேற்கண்டுள்ளவாறு இந்நகராட்சிக்கு 2021-2022 மற்றும் **2022-2023** ஆண்டிற்கு தனிநபர் கழிவறை கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளவாறு முதற்கட்டமாக **63** பயனாளிகளுக்கும் விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டு SBM வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தனிநபர் கழிவறைகள் கட்டும்பணி முடிவடைந்து வரும்நிலையில் பயனாளிகளுக்கு அரசு மானிய தொகையினை வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்டவாறு **2021 – 2022** ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **63** எண்ணிக்கை கழிவறைகளுக்கும், மாநில அரசு பங்குதொகை ரூ. 168000/. நகராட்சிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகராட்சி பங்குதொகை தனிநபர் கழிப்பறை ஒன்றுக்கு ரூ. **2666**/. வீதம் **133** எண்ணிக்கைக்கும் (**133**Xரூ.**2666** = ரூ. **354578.00** ) ரூ. **354578.00** மட்டும் நகராட்சியின் பங்குதொகையாக வழங்க வேண்டியுள்ளது. எனவே நகராட்சியின் பங்குதொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 14433/ 2017/ SBM-1 நாள். **02.11.2022**ன் தேதிய கடிதத்தில் SBM (U) 2.0 தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்தும் பணிகளுக்கும் வழங்கப்படும் செலவினம் காசோலையின்றி ஒப்பந்ததாரர் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், அரசு மானியத்தொகை (PFMS) Public Finance Management System வழியாக தொகை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்டுள்ளவாறு தனிநபர் கழிவறை கட்டும்பணி மத்திய அரசு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இப்பணியினை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு **133** எண்ணிக்கை தனிநபர் கழிவறைக்கும் நகராட்சி பங்குதொகையாக ரூ. **354578.00** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6563 /2022/H1**

தீர்மான எண். 237 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **16.11.2022** | **பொருள் 24 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம். நக.எண். F1/5919/2022 நாள். 03.11.2022 ன் படி வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம் பணி 12.11.2022, 13.11.2022 26.11.2022 மற்றும் 27.11.2022 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது எனவும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான பணிகள் நடைபெறுவதை பொதுமக்கள் நன்கு தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாக்காளர் பட்டியலின் சிறப்பு திருத்த முகாம் பணி தொடர்பான ஆட்டோ விளம்பரம் செய்வது மற்றும் விளம்பர தட்டிகள் வைப்பதற்கு ஏற்படும் தோராய செலவினமாக ரூ.30,000/. மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 10260 /2017/F1** | தீர்மான எண். 238 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 25** இந்நகராட்சியின் பொது நிதி 2022-2023 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி பணிகளுக்கு 13.10.2022 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின்பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண். 239 அனுமதிக்கப்பட்டது |

**2022-2023 பொது நிதி**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் இரண்டு அம்மா உணவகங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை சரி செய்யும் பணி | 0.30 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 2 | பெரம்பலூர் நகராட்சி செங்குணம் பகுதியில் உள்ள குடிநீர் கிணற்றிலிருந்து சென்னை செல்லும் சாலை உள்ள பாலம் வரை ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள PVC பைப் லைன் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை அகற்றிவிட்டு புதியதாக GI பைப் லைன் அமைக்கும் பணி | 0.60 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.12% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.15 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 3 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15,16,17 பகுதியில் உள்ள சமத்துவபுரம், அண்ணாநகர், மற்றும் அரணாரை பகுதியில் உள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டிலுள்ள பொதுகுழாய்களை வெல்டிங் மற்றும் பராமரிப்பு பணி | 0.65 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 4 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 ல் உள்ள பாரதி தாசன் நகர் பகுத்தறிவு இல்லம் முதல் ராமர் வீடு வரை பைப்லைன் விஸ்தரிக்கும் பணி மற்றும் வார்டு எண் 17 துறையூர் சாலையில் உள்ள குழந்தை ஏசு மருத்துவமனை முதல் ஷாஜகான் நகர் வரை மெயின் பைப்லைன் விஸ்தரிக்கும் பணி | 3.50 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.12% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 5 | பெரம்பலூர் நகராட்சிக்கு பகுதிகளுக்கு அரசு பொது விழாக்களில் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்தவற்கு அதற்கு தேவையான 500 லிட்டர்கள் கொள்ளவு கொண்ட 5 எண்ணிக்கையில் PVC டேங்குகள் சப்ளை செய்யும் பணி | 0.20 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 6 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15ல் உள்ள குளோரினேசன் அறையில் உள்ள Gate valve Cover Slab , நகராட்சி அலுவலகம் மற்றும் தெப்பகுளம் கேட் மற்றும் தெப்ப குளம் நிழற்குடையில் உள்ள பழுதான இரும்பு நாற்காலிகளை பழுது சீர் செய்யும் பணி | 0.30 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 7 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 ல் உள்ள மேட்டுத்தெரு ராம் தியேட்டர் வடக்குபுறம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் குழாய் வசதி அமைக்கும் பணி | 2.50 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 8 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேவையற்ற இடங்களில் உள்ள பயன்பாட்டில் இல்லாத 8 எண்ணிக்கையில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிகளை அப்புறப்படுத்தும் பணி | 0.30 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.35% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 உள்ள அரணாரை பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.90 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.38% மதிப்பீட்டிற்கு | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறைவு<br><br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.62 % மதிப்பீட்டிற்கு அதிகம் | மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 10 | பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு இறப்பு பதிவேடுகளை பராமரிக்கவும், கோப்புகள் மற்றும் பதிவேடுகள் வைப்பதற்கு தேவையான பீரோக்கள் மற்றும் வருவாய் பிரிவிற்கு தேவையான மேஜைகள், நாற்காலிகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு பீரோக்கள் புதியதாக கொள்முதல் செய்யும் பணி | 5.00 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G, கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 11 | பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 09 ஔவையார் தெருவில் உள்ள மூன்று மகளிர் கழிவறைகள் சுற்றி உள்ள முள்புதர்களை JCB வாகனம் வைத்து அப்புறப்படுத்தும் பணி | 0.40 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 12 | பெரம்பலூர் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் நகர் மன்ற தலைவர் அறை , நகர் மன்ற துணைதலைவர் அறை மற்றும் அலுவலக வருவாய் பிரிவு அலுவலகத்தில் சேர் , பெயிண்டிங் பணி , கழிவறை புதுப்பித்தல் பணி , அலுமினிய சேனல் , பாதாள சாக்கடை இணைப்பு பணி , புளு சீட் , கதவு மற்றும் மின் விளக்குகள் அமைக்கும் பணி | 4.90 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 13 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 வடக்கு மாதவி சாலை டாக்டர் ராஜா முகமது வீடு அருகில், வார்டு எண் 20ல் உள்ள யாழினி ஹோட்டல் அருகில், மற்றும் விளாமுத்தூர் சாலையில் உள்ள மேடு பள்ளங்களை சரி செய்து சீரமைக்க சிமெண்ட் தளம் அமைக்கும் பணி மற்றும் | 0.60 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வார்டு எண் 02ல் அருணாசல கவுண்டர் நகரில் போர் வெல் பிளாட்பாம் அமைக்கும் பணி | | | | |
| | 14 | பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்திற்கு தற்போது பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் அதன் உபகரணங்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதியதாக கணினிகள் , பிரிண்டர்கள் மற்றும் அதன் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி | 5.00 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 15 | பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 09 ஔவையார் தெருவில் உள்ள மூன்று மகளிர் கழிவறைகளுக்கு தண்ணீர்வசதிகள் மின் வசதிகள் கழிவுநீர் குழாய் | 5.85 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 16 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள பழைய பேருந்து நிலையம் , விவேகானந்தர் தெரு கிப்ஸ் ஷோரூம் அருகில் உள்ள சிறுபாலம் அமைக்கும் பணி | 3.60 | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 17 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட செங்குணம் பகுதியில் உள்ள திறந்த வெளி இரண்டு கிணற்றுகளில் பழுதடைந்த கேபிளை மாற்றி புதியதாக அமைக்கவும், ஆலம்பாடி தரைநிலை தொட்டியில் உள்ள மின்மோட்டாரை அதன் அருகே உள்ள திறந்தவெளிகிணற்றிற்கு மாற்றியமைக்க தேவையான HDPE Hose கேபிள் மற்றும் உதிரிபாகங்கள் பொருத்தி பணி | 3.50 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 18 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 ல் உள்ள சிலோன் காலணி பகுதியில் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் உள்ள கால்வாயில் சிறுபாலம் அமைக்கும் பணி | 3.00 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 19 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 வெங்கடேசபுரம் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து பழுதடைந்துள்ளதால் அவற்றை பழுது சீர் செய்யும் பணி | 6.50 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 20 | பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 16 ல் உள்ள அரணாரை பெண்கள் பொது கழிப்பறையில் கதவுகள் , மின் விளக்குகள் , தண்ணீர் வசதி , மற்றும் பராமரிப்பு பணி | 1.50 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 21 | பெரம்பலூர் நகராட்சி புதிய பேருந்து நிலையம் வார்டு எண் 6 ல் உள்ள ( சரவணபவன் ஹோட்டல்) பொது கட்டண கழிப்பறையில் தரைதளம் , மின் விளக்குகள் , தண்ணீர் வசதி , மற்றும் சரவணபவன் ஹோட்டல் பராமரிப்பு பணி | 2.00 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.40% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.50 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 22 | பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 16 ல் உள்ள அரணாரை பெண்கள் பொது கழிப்பறையில் கதவுகள் , மின் விளக்குகள் , தண்ணீர் வசதி , மற்றும் பராமரிப்பு பணி | 1.50 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.50% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.60 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 23 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 துறைமங்கலம் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கூடத்திற்கு குடிநீர் வசதி , மின் வசதி மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | 4.00 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.40% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.50 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |
| | 24 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் ராம்தியேட்டர் அருகில் ஏற்கனவே உபயோகப்படுத்தப்பட்டு வந்த சங்கு ஒலிப்பான் பழுதடைந்த உதிரிபாகங்கள், மோட்டார் பழுது பார்த்தல் மற்றும் பெயின்டிங் செய்யும் பணி | 0.95 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 20 ல் உள்ள கலெக்டர் அலுவலக சாலையில் தெருவிளக்குகளில் உள்ள மின் ஒயர்கள் பழுதடைந்து உள்ளதை புதிய கேபிளாக மாற்றும் பணி | 8.20 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 26 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரம்பலூர் அரியலூர் சாலையில் விவேகானந்தர் நகர் அருகில் சாலையின் நடுவே உள்ள மின்கம்பம் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளதால் அதனை சரிசெய்ய புதியதாக 7 m உயரமுள்ள LED விளக்கு கம்பம் அமைக்கும் பணி | 0.70 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 27 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14 ல் உள்ள அன்பு நகர் பகுதியில் புதியதாக ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 1.25 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.50% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.60 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 28 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 17 ல் உள்ள AVR நகர் 2 வது குறுக்கு தெரு பகுதியில் பாதாள சாக்கடை குழாய் வசதி அமைக்கும் பணி | 1.70 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| 29 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10 ல் உள்ள ராஜா நகர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் வசதி அமைக்கும் பணி | 1.70 | Tmt, ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.40 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட வரிசை எண் **01** முதல் **16** வரை உள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G ,கண்ணன் அவர்களின் (–) 0.10%, (–) 0.12% , (–) 0.10% , (–) 0.12 %, (–) 0.10 %, (–) 0.10 %, (–) 0.08 %, (–) 0.35 %, (–) 0.38 %, (–) 0.20 %, (–) 0.30 %, (–) 0.08 %, (–) 0.30 %, (–) 0.10 %, (–) 0.10 %, (–) 0.10 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | 2. மேற்கண்ட வரிசை எண் **18** முதல் **29** வரை உள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Tmt, ஜெயந்தி அவர்களின் (–) 0.20%, (–) 0.20% , (–) 0.30% , (–) 0.30 %, (–) 0.40 %, (–) 0.50 %, (–) 0.40 %, (–) 0.30 %, (–) 0.20 %, (–) 0.20 %, (–) 0.50 %, (–) 0.10 %, (–) 0.30 % குறைந்த மதிப்பீட்டினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண்: 5602 /2022/இ1 | |
| **16.11.2022** | **பொருள் 26:**நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் **02.07.2022** அன்று நகராட்சி அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மேற்படி, ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சியால் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களும் தகுதி சான்று பெற்ற விவரம் கோரப்பட்டதில் ஒரு சில வாகனங்கள் தவிர்த்து மீதமுள்ள வாகனங்களுக்கு தகுதிசான்று பெறப்படாமல் இயக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.<br>தகுதிசான்று பெறாத வாகனங்களுக்கு தகுதி சான்று பெற்று வாகனங்கள் இயக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தகுதி சான்று பெறாத வாகனங்கள் கடந்த **5** ஆண்டுகளுக்கு மேலாக தகுதி சான்று பெறாமல் இருந்து வருகிறது. எனவே, தகுதிசான்று பெறாத வாகனங்களுக்கு தகுதிசான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகள் அனைத்தும் சரிசெய்து தகுதிசான்று பெற வேண்டியுள்ளதால் பொது சுகாதார பிரிவு குப்பை அள்ளும் வாகன எண் **TN 46 P 4158** என்ற வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு **நகர் மன்ற தீர்மான எண் 209/2022 நாள் 20.10.2022ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது** அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் 20.09.2022ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ளும் போது சேவை வரி மற்றும் உதிரிபாகங்களின் விலை ஏற்றத்தின் காரணமான கூடுதலாக ரூ.50.000/– செலவின மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூடுதலாகும் செலவினத்தொகை ரூ.50000/–க்கு **(ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும் )** மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொதுசுகாதாரப்பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பட்டியல் தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 4465 /2022/ இ1** | தீர்மான எண். 240 அனுமதிக்கப்பட்டது |
| **16.11.2022** | **பொருள் 27:** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான பேரூந்து நிலையத்திற்கு நுழைவு வாயில் அமைக்க **2019–2020** ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணி செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்து முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்கண்ட பணியினை செய்ய கடந்த **30.11.2020**ம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.<br>ஒப்பந்ததாரர் நான்கு பில்லர்கள் மட்டும் **15”** உயரத்திற்கு எழுப்பப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் பணியினை தொடர்ந்து ஆரம்பிக்கவில்லை என்பதாலும், சுமார் பணிஆணை வழங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேல் ஆனநிலையிலும், பொதுமக்களுக்கும் பேரூந்துகள் உள்ளே சென்றுவர போதுமான இடம் இல்லாததால் மிகவும் சிரமப்பட்டு செல்ல வேண்டிய நிலையில் உள்ளதாலும், மேற்படி பில்லரை தரைமட்டத்திற்கு இடித்து அப்புறப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதால் மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 6270 /2020/ இ1** | தீர்மான எண். 241 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 16.11.2022 | **பொருள் 28:** இந்நகராட்சியில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுத்திட டெங்கு மஸ்தூர் (Mazdoor) பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 2571/2017/J1 நாள். 28.11.2017ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.08.2022 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் இந்நகராட்சியில் 21 வார்டுகளுக்கும் ஒரு வார்டுக்கு இரண்டு களப்பணியாளர்கள் வீதம் (21 X 2 = 42) 42 எண்ணிக்கை களப்பணியார்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் வழியாக முன்மொழிவுகள் அனுப்பி வைக்க இந்நகர் மன்ற தீர்மானம் எண். 198 நாள். 20.10.2022 ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண். 5177/2022/H1 நாள். 20.10.2022ன் படி 42 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திகொள்ள முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br>தற்பொழுது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதாலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்வதற்காக களப்பணியாளர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியின் கோட்டம் எண்-**1** க்கு 21 எண்ணிக்கை களப்பணியாளர்களை **80** நாட்களுக்கு அவசர அவசியம் கருதி நியமிக்கப்பட வேண்டியுள்ளதால் இப்பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்வதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் தோராயமாக ரூ.10.00 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி டெங்கு கொசுபுழுஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 5177 /2022/H1** | தீர்மான எண். **242** அனுமதிக்கப்பட்டது |
| 16.11.2022 | **பொருள் 29:** இந்நகராட்சியில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுத்திட டெங்கு மஸ்தூர் (Mazdoor) பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 2571/2017/J1 நாள். 28.11.2017ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.08.2022 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் இந்நகராட்சியில் 21 வார்டுகளுக்கும் ஒரு வார்டுக்கு இரண்டு களப்பணியாளர்கள் வீதம் (21 X 2 = 42) 42 எண்ணிக்கை களப்பணியார்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் வழியாக முன்மொழிவுகள் அனுப்பி வைக்க இந்நகர் மன்ற தீர்மானம் எண். 198 நாள். 20.10.2022 ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண். 5177/2022/H1 நாள். 20.10.2022ன் படி 42 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திகொள்ள முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br>தற்பொழுது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதாலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்வதற்காக களப்பணியாளர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியின் கோட்டம் எண்-**2** க்கு 21 எண்ணிக்கை களப்பணியாளர்களை **80** நாட்களுக்கு அவசர அவசியம் கருதி நியமிக்கப்பட வேண்டியுள்ளதால் இப்பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்வதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் தோராயமாக ரூ.10.00 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். **243** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி டெங்கு கொசுபுழுஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 5177 /2022/H1** | |

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**
**நகர்மன்றதலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**

**// உண்மை நகல்//**

**ஆணையாளர் (பொ)**
**பெரம்பலூர் நகராட்சி**